




# அருணாசலத்தைப் பற்றிய வழக்கில் பகவானுடைய வாக்குமூலம்

**( இது முதலில் மலை வழி என்ற பத்திரிகையில் 1990 ஆண்டில் பக்கம் 14-20 ல் வெளியாயிற்று. )**


**மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்**
------------------------
**டேவிட் காட்மன்**
**(DAVID GODMAN)**

**தமிழ் மொழி பெயர்ப்பு**
------------------------
**சாந்திப்பிரியா**
**(SANTHIPRIYA)**
**(nrj_1945@yahoo.com )**


1930 ஆம் ஆண்டு வரை திருவண்ணாமலையில் அருணாசலாவின் கிழக்கு பகுதி அருணாசலேஸவர் ஆலயத்தினரின் நிர்வாகத்தில் இருந்தது. 1934 ஆம் ஆண்டிற்கு முன் அந்த நிலையை அனைவரும் ஏற்றிருந்தனர். ஆலயத்தின் நிர்வாகம் அந்த ஆலயத்தில் பக்கத்தில் இருந்த குளங்கள், மற்றும் ஆலயத்தையும் பாதுகாத்தும் பக்கத்தில் இருந்த காடுகளில் ஏற்பட்ட தீ விபத்துக்களை தடுத்தும் அந்த காடுகளில் கிடைத்த பொருட்களை நல்லபடி விற்கவும் மக்களுக்கு உதவி வந்தனர். அந்த அதிகாரிகளுடைய நிர்வாகம் அத்தனை சிறந்த முறையில் இருந்ததின் காரணம் மக்கள் அந்த மலையை சிவபெருமானின் அவதாரமாகவே கருதியதுதான். ஆப்படிப்பட்ட நம்பிக்கை மக்களுடைய











மனதில் மிக அதிகமாக இருந்ததினால் திருவண்ணாமலையில் இருந்த ஆலய நிர்வாகிகளே அந்த ஆலயத்தை பராமரிக்கச்

சிறந்தவர்கள் என எண்ணினர். 1934 ஆம் ஆண்டில் அந்த நடைமுறைப் பழக்கத்தை அரசாங்கம் எதிர்த்தது. அந்த ஆண்டு மே மாதத்தில் வெளியிடப்பட்ட அரசு ஆணையில் திருவண்ணாமலை அருணாசலேஸ்வரா இனி அரசாங்க சொத்தாகும் என்ற அறிவிப்பை வெளியிட்டனர். ஆலய நிர்வாகிகள் அந்த ஆணையை எதிர்த்து வழக்கு தொடுத்து ஆலய நிர்வாகமே மலையின் கிழக்குப் பகுதியின் 1750 சதுர அடி நிலப்பரப்பின் சொந்தக்காரர்கள் என வாதிட்டனர். அந்த ஆலயத்தின் பின்புறம் இருந்த குளங்கள் , கிணற்றுக்கள் உள்ளடக்கிய பகுதிகள் அவை. ஆலய நிர்வாகிகளில் ஒருவர் பகவானிடம் சென்று அந்த நிலையை எடுத்துரைத்து அவர் நீதி மன்றத்துக்கு வர வேண்டும் என வேண்டுகோள் விடுக்க, பகவானும் அதை ஏற்றார். அதன்படி 1938 ஆம் ஆண்டு வக்கீல்களும், நீதிமன்றத்தின் அதிகாரிகளும் பகவானிடம் வந்து விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றனர். அதற்கு முன் அவரிடம் எழுத்து மூலம் பதில் பெற்றனர். 492 ஆம் சாட்சியாக அமைந்தது அது.

“ நான் திருவண்ணாமலைக்கு 1896 ஆம் ஆண்டு வந்தேன். 1899 முதல் 1922 ஆம் ஆண்டுவரை இரமணாச்சிரமம் என்ற பெயரில் இருந்த இடத்தில் வாழ்ந்து வந்தேன். அந்த சமயத்தில் அந்த மலையடிவாரம் முழுவதும் ஆலய











தேவஸ்தானத்தினரிடம் இருந்தது. நான் வசித்து வந்த அந்த ஆசிரமம் 1902 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. அதன் கட்டிடப் பணி 1916 ஆம் ஆண்டு நிறைவடைந்தது. அந்த ஆலயமும் தேவஸ்தானத்தின் அனுமதி பெற்றே கட்டி முடிக்கப்பட்டது. ( அந்த ஒப்புதலும்

வாய்மொழிச் சொல்லாகவே இருந்தது. அது எழுத்தில் கொடுக்கப்படவில்லை ). 1899 ஆம் ஆண்டு முதல் சில ஆண்டுகள் முன் நான் ஆசிரமத்தை விட்டு வெளியேறியவரை அந்த இடத்தின் முன் பகுதி - கிழக்குப்புறம் - அரசினருடைய வசத்தில் இருநதிருக்கவில்லை ” இப்படியாக சாட்சியம் அளித்த பகவான் அதைத் தவிற அந்த காலகட்டத்தில் ஆலய நிர்வாகம் எப்படி அந்த இடத்தை நிர்வாகித்து வந்தது என்று பல உதாரணங்களைக் காட்டி விளக்கி இருந்தார்.

பல வருடங்களுக்கு முன்பு ஸரஸ்வதி சுவாமிகள் என்பவர் அந்த மலையில் வசித்து வந்தார். அவர் முதலில் அங்கு சுப்ரமணிய கடவுளை ஸ்தாபனம் செய்து அதை ஆராதிக்கும் இடமாக மாற்ற முயன்றார். ஆனால் அதை தேவஸ்தான அதிகாரிகள் தடை செய்தனர். ஒரு அறிக்கையில் ( ஆவர்கள் ஆணையில் வெளியானது ) அந்த மலையில் கடவுளே லிங்க வடிவில் இருப்பதினால் மற்ற எந்த தெய்வத்தையும் அங்கு பிரதிட்சை செய்வதையோ ஆராதீக்கவோ அனுமதிக்கப்பட மாட்டாது, அது சாத்திரத்திற்கும் விரோதமானது என கூறி இருந்தனர். என்னுடைய தாயார் மரணம் அடைந்ததும் அந்த மலையில்











அவளுக்கு சமாதி எழுப்பக் கூடாது என உடனடியாக எச்சரிக்கை விட்டனர். ஏன் எனில் அங்கு அவளுக்கு சமாதி எழுப்பப்பட்டு விடலாம் என்ற அச்சம் இருந்தது. ஆகவே அதற்கும் அனுமதி தரவில்லை. அந்த மலை ஈஸ்வர சொருபமானது என்பதே. அவர்களுடைய நிலைபாட்டின் காரணம். அந்த நாட்களில் மலை அடிவாரத்தில் எந்த மரங்களையும் வெட்டக் கூடாது என ஆலய நிர்வாகம் தடை விதித்து

இருந்தது. ஆனால் அங்கிருந்த புற்களை வெட்டவும், மற்ற காட்டுப் பொருட்களை வெட்டவும் ஒரு சிலருக்கு அனுமதி தந்தும், உரிமை தந்தும் இருந்தது. அந்த மலையில் எப்பொழுது தீ விபத்து நேரிட்டாலும் அதை அணைப்பதற்கான செலவினை ஆலய நிர்வாகம் ஏற்று இருந்தது. ஒருமுறை அங்கு இருந்த முற்புதர்களை நாங்கள் வெட்டிவிட்டுக் கொளுத்திய பொழுது அதை ஆலய நிர்வாகம் கண்டித்தது மட்டும் இன்றி அந்த இடத்தில் தீ மூட்டுவதற்கு அனுமதி இல்லை என்றும் கூறிவிட்டனர். ஆவர்களுடைய அத்தகைய ஆதிக்கம் அனைத்தும் கிழக்குப்புறத்தில் இருந்த மலையடிவாரத்தில் பொருந்தியது.”

இப்படியாகக் தன் பதிலில் கூறிய பகவான் அந்த மலை எப்படிப்பட்ட விதத்தில் விசேஷமானது எனவும், எதனால் அதை ஆலய நிர்வாகத்திடம் தந்து விட வேண்டும் என மேலும் கூறினார்.

“ அந்த மலை கடவுளே வசிக்கும், லிங்க











ஸ்வரூபமானது என்ற நம்பிக்கை தொடக்கத்தில் இருந்தே இருந்துள்ளது. இப்படிப்பட்ட ஐதீகம் உலகில் வேறு எங்கும் கிடையாது. அதுதான் அந்த மலையின் விசேஷம். அந்த மலை கடவுள் வசிக்கும் இடம், மற்றும் மாபெரும் ஜோதியை உள்ளடக்கிக் கொண்டு உள்ள மலை. அதனால்தான் அந்த வெளிச்சத்தை உலகிற்குக் காட்ட வருடாவருடம் தீப உற்சவம் நடைபெறுகின்றது. அதற்கு ஆதாரம் வேதங்களிலும், புராணங்களிலும் மற்றும் மக்கள் இயற்றிய பாடல்களிலும் உள்ளன. அதனால்தான் அந்த மலையை சுற்றி

அனைவரும் நடந்து சிவனை வழிபடும் விதமாக கிரிப் பிரதர்ஷணம் என்ற வழிபாட்டு முறை வழக்கத்தில் உள்ளது. நானே அதை நம்புவதினால்தான், கிரி பிரதர்ஷணம் செய்து உள்ளேன்.

அந்த ஆலயத்தையும் , மலையையும் பிரித்து பேசும் விதத்தில் எந்த சாத்திரத்திலும் ஆதாரம் இல்லை. இரண்டுமே ஒன்றுதான் என்பதற்கு ஆதாரமாக கார்த்திகை தீப தினத்தில் மலை மீதும் ஆலயத்திலும் தீப உற்சவம் ஒரே நாளில், ஒரே நேரத்தில் நடைபெறுகின்றது. அந்த மலை கடவுளே என்பதற்கு மேலும் சான்றாக வருடம் இருமுறை நடைபெறும் விழாவில் அந்த மலையை பிரதர்ஷணமாக அருணாசலேஸ்வரர் வருவது போன்ற காட்சிகள் நடைபெறுகின்றன.

அதைத் தவிற பகவான் கூறியது இது:











“சிவபெருமான் அங்கு மூன்று ரூபங்களில் உள்ளார். அவை (1) பரப்பிரும்மன் (2) லிங்க ரூபம் (3) சித்தர். அதில் மூன்றாவதில் சிவன் அருணகிரியாக மலையின் வடக்குப் பகுதியில் வசிக்கின்றார். இந்த கருத்து வழக்கு மன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலத்தில் இல்லை என்றாலும் மற்ற சமயத்தில் அவர் கூறியவை ஆகும்.

பகவானுடைய வாக்குமூலத்தின் தொடர்ச்சி இது:- பரம்பரை வழக்கத்தின்படி தேவஸ்தானம் இந்த மலையை லிங்க ரூபமாகக் கருதி அதன் உச்சியில் அபிஷேகம் செயது வந்தது. கடந்த பத்து பதினைந்து வருடங்களாக அந்த மலை உச்சியில் உள்ள தீபம் ஏற்றப்படும்

சட்டியானது பண்டிகை உற்சவத்தின் பொழுது மேலே எடுத்துச் செல்லப் படுகின்றது. அதற்கு முன்பு பல வருடங்களாக அந்த கொப்பரை எனப்பட்ட சட்டியானது மலை உச்சியிலேயே வைக்கப்பட்டு இருந்தது. நான் அருணாசலாவின் பக்தன். அவரைக் குறித்து நான் இயற்றிய பாடல் ஒன்றில் கூட அந்த மலையை ஈஸ்வர சொரூபம் என்றுதான் குறிப்பிட்டு உள்ளேன்.

பகவான் தன்னுடைய பாடலை மேற்கோள் காட்டுவதற்கு அரசு வக்கீல எதிர்ப்பு தெரிவித்தார். அந்த தமிழ் பாடல் எங்கும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. ஒரு ஆங்கில நூலில் காணப்படும் அந்த பாடல் இது : “ அந்த மலையில் இருந்து அருணாசலேஸ்வரர் வெளியேறிய பொழுது விஷ்ணுவும் பிரும்மாவும்









வேண்டிக் கொண்டதற்கு இணங்கி சிவன் மீண்டும் அந்த மலைக்கு உள்ளே பிரவேசித்தார். அதே நேரத்தில் தானே லிங்க உருவில் மலையின் அடிவாரத்தில் தோற்றம் அளித்தார். ஆக அந்த மலை கடவுளை பிரதிபலிக்கன்றது.




அது போன்ற கருத்துப் பிரதிபலிப்பு பகவானுடன் நடத்திய சம்பாஷணையில் தெரிய வந்தது. அதில் அவர் “ சிவன் முதலில் ஒரு ஒளியாகத்தான் தோற்றம் தந்தார். அதன் பிறகு மற்றவர்களுடைய வேண்டுதலை ஏற்று அந்த மலைக்குள் சென்று அந்த ஒளி மறைந்ததும் லிங்க உருவில் தோற்றம் அவர் தந்தார் ” எனக் கூறி இருந்தார்.




பகவான் கொடுத்த வாக்கு மூலத்தில் அந்த பாடலை உவமையாகக் காட்டியப் பின் வழக்கு

மன்ற விசாரணை ஐந்து நாட்களுக்கு ஒத்திப் போடப்பட்டது. அதற்குப் பின் வாக்கு மூலம் மீண்டும் பதிவாயிற்று. அதில் பகவான் மேலும் சில புராணக் கதைகளையும் பழக்க வழக்கங்களைப் பற்றியும் மேற்கோள் காட்டினார்.




பிரும்மாவுக்கும், விஷ்ணுவிற்கும் ஜோதி வடிவில் காட்சி தந்த சிவபெருமான் ஈஸ்வரிக்கும் அதே வடிவில் காட்சி தந்த பின் ஒளிப் பிழம்பாகவே அந்த மலைக்குள் பிரவேசித்து மறைந்தார்.

அந்த மலையில் புராதானமான நீர்க் குளங்கள்






முலைப் பால் தீர்த்தம், மற்றும் பாத தீர்த்தம் - என்ற பெயர்களில் உள்ளன. அவற்றை சிவபெருமானும் பார்வதியும் குகை நமச்சிவாயாவிற்கென உருவாக்கி இருந்தனர்.

அரசு வக்கீல்கள் பகவானிடம் குறுக்கு விசாரணை செய்த பொழுது அவர் கூறியவற்றை நான் தனித்தனியான பத்திகளாக (பாராக்கள்) பிரித்துத் தந்து உள்ளேன். அதைப் படித்தப் பின் வாசகர்கள் அவரிடம் என்ன கேள்விகள் கேட்கப்பட்டு இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

நான் விருபக்ஷா குகையில் பதினாறு ஆண்டுகளும், ஸ்கந்திராஷ்ரமத்தில் ஆறு ஆண்டுகளும் இருந்தேன். இரமணாஷ்ரமத்தில் 1922 ஆம் ஆண்டு முதல் இருந்து வந்தேன். விருபக்ஷா குகையில் நான் ஒரு கட்டிடம் கட்டினேன். அதற்கு எவரிடம் இருந்தும் எழுத்து மூலம் அனுமதி பெற்று இருக்கவில்லை. 1902 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கட்டிடமான

ஸ்கந்திராஷ்ரமம் 1916 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது. அதற்குப் பிறகும் சில கட்டுமாணப் பணிகள் நடந்து வந்தன.

முதலில் ஸ்கந்திராஷ்ரமம் ஒரு புனிதத் தீர்த்தமாகவே ஆரம்பிக்கப் பட்டாலும் பின்னர் அது மற்றவர்கள் வசிக்கும் இடமாயிற்று. அது ஆரம்பிக்கப் படும் முன் ஒரு இடத்தில் தண்ணீர்த் திட்டுக்கள் இருந்தன. அதன் அருகில் சுமார் இருபது மீட்டர் தொலைவில் இருந்த











குகைக்குள் இருந்தே அது ஆரம்பம் ஆயிற்று. அந்த தீர்த்தம் விருபக்ஷா குகை மற்றும் ஸ்கந்திராஷ்ரமத்தின் இடையில் உள்ளது. அதற்குப் பின்னரே ஸ்கந்திராஷ்ரமத்தின் தீர்த்தம் உருவானது.

அதை அந்த ஆசிரமத்தில் வாழ்ந்து வந்த கந்தன் என்பவர் தன்னுடைய கைகளினால் கட்டியதால் அதற்கு அந்தப் பெயர் ஏற்பட்டது. அதில் இருந்தே அந்த ஆசிரமத்திடம் அவருக்கு இருந்த பிணைப்பு புலன் ஆகும்.

அந்த ஆசிரமத்தை நிறுவ எவரிடம் இருந்தும் அனுமதி பெறவில்லை. நான் அங்கு இருந்ததால் எவரும் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. மாறாக அதற்கு ஊக்கம் தந்தனர்.

அங்கு இருந்த நேரத்தில் அங்கு தங்கும் இடம் அமைக்க எவரிடமும் அனுமதி பெறவில்லை. மேலும் அதை விஸ்திரப்படுத்திய பொழுதும் எவருடைய அனுமதியையும் பெறவில்லை.

அவைகளை கட்ட என்னுடைய ஆணை

பிறப்பிக்க வேண்டிய அவசியமே இன்றிப் போனது. அவரவர் தங்களுடைய சொந்த வேலையைப் போலவே அதை செய்தனர். நான் அதைக் கட்டுமாறு எவரிடமும் கூறவில்லை, அவர்கள் கட்டியதைத் தடுக்கவும் இல்லை. இப்படித்தான் விருபக்ஷா குகை, ஸ்கந்தாஷ்ரமம் மற்றும் இரமணாஷ்ரமம் போன்றவைகள்











தோன்றின. அவற்றின் பக்கங்களில் இருந்த மற்ற ஆசிரமங்களும் அப்படித்தான் கட்டப்பட்டன. எவற்றுக்கும் எவருடைய அனுமதியையும் பெறவில்லை.

ஸரஸ்வதி ஸ்வாமிக்கு தேவஸ்தானம் நோட்டீஸ் அனுப்பியது குறித்து எனக்குத் தெரியும், ஆனால் அது எந்த வருடத்தில் தரப்பட்டது என்பது நினைவில் இல்லை.

நான் அந்த மலையில் இருந்த பொழுது ஒரு வேல் மற்றும் சிலை ( சுப்ரமணிய ஸ்வாமி ) இருந்தது. அந்த சிலையை அங்கு வைக்க தேவஸ்தானம் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ஆனால் அதற்கு பெரிய அளவில் விழா நடத்தி விரிவாக்கப் படுவதை மட்டும் எதிர்த்தனர்.

விருபக்ஷா குகை மற்றும் குகை நமச்சிவாயா ஆலயம் இரண்டிலும் மற்றவர்கள் தங்க இட வசதி இருந்தது. அவற்றில் அவைகளை நிறுவிய இரண்டு மகான்களின் சமாதி இருந்ததா எனத் தெரியாது. குகை நமச்சிவாயாவில் ஒரு லிங்கம் உள்ளது. விருபக்ஷா குகையில் ஒரு பலி பீடம் உள்ளது. குகை நமச்சிவாயாவில் ஒரு லிங்கம் உள்ளது, அந்த லிங்கத்திற்கு பூஜைகளும், அபிஷேகமும் செய்யப்பட்டன. ஆனால்

விருபக்ஷா குகையில் இருந்த பலிபீடத்தில் பூஜை மட்டுமே செய்யப்பட்டது. பரவலான நம்பிக்கையின்படி அந்த இரண்டு இடத்திலும் சமாதிகள் உள்ளன.











விருபக்ஷ தேவா மற்றும் குகை நமச்சிவாயா என்ற இருவரும் சமாதி அடைந்து 300 அல்லது 400 ஆண்டுகள் இருக்கும். அந்த கட்டிடங்கள் எப்பொழுது கட்டப்பட்டன என்பது குறித்து எனக்கு எதுவும் தெரியாது.

உபநிஷத்துக்கள், லிங்க மற்றும் ஸ்கந்த புராணத்தில் இந்த மலையை ஈஸ்வர சொரூபமானது என்று கூறி உள்ளனர்.

ஆனால் உபனிஷத்தில் எந்த பகுதியில் இப்படி குறிப்பிடப்பட்டு உள்ளது என அதைப் பார்க்காமல் கூற இயலாது.

இந்த மலையில் ஜடை ஸ்வாமிகள் என்பவர் வசித்து வந்தார். மரணம் அடைந்ததும் அவருடைய உடலை மலைக்குக் கீழே கொண்டு வந்து எரித்தனர். பழனி ஸ்வாமியின் உடலும் அப்படியேதான் தகனம் செய்யப்பட்டது. எவர் மறைந்தாலும் அந்த மலையில் சமாதி கட்ட முடியாது. அவர்களை மலை அடிவாரத்தில் கொண்டு வந்த பின் அங்குதான் தகனம் செய்ய முடியும். மலை மீது மூன்றில் இரண்டு பகுதி உயரத்தில் வாழ்ந்து கொண்டு இருந்த ஒருவரை அவர் இறந்து போனதும் கீழே எடுத்து வந்துதான் சமாதியை எழுப்பினர்.

ஜடை ஸ்வாமிகள் சுமார் ஐந்து அல்லது ஆறு வருடங்கள் முன்னர்தான் சமாதி அடைந்தார்.

மற்றவர்கள் 1901 ஆண்டு முதல் 1920 ஆண்டுக்கு முன்பாகத்தான் சமாதி அடைந்தனர்.











நான் என்னுடைய தாயாருக்கு மலை மீது சமாதி அமைக்க எண்ணியதே இல்லை. அப்படி ஒரு எண்ணத்தினை வேறு எவரிடமும் நான் வெளிப்படுத்தியதும் இல்லை.

வழக்கில் தீர்ப்பு அளிக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகள் கழிந்து விட்டன. பகவான் அளித்த பல வாக்குமூலங்களை நான் விட்டு விட்டேன் ஏன் எனில் அவைகள் முதலில் அளித்த வாக்குமூலத்தையே திரும்பக் கூறி இருந்தவை என்பது மட்டும் இன்றி அவை அருணாசலா பற்றியும் இல்லாமல் ஆசிரம நிர்வாகத்தைப் பற்றிய பொதுவான கேள்விகளுக்கான பதில்களாக அமைந்து இருந்ததுதான் காரணம்.

அவருடைய ஒரு வாக்குமூலத்தில் பகவான் ஸ்கந்த மற்றும் சிவ புராணத்தில் அருணாசலாதான் கடவுளாக அந்த மலையில் உதித்து இருக்கின்றார் என கூறி உள்ளதாகத் தெரிவித்திருந்தார். அதற்கு ஆதாரமாக பகவான் அவற்றை தேடி எடுத்து வழக்கு மன்றத்தில் ஆவணமாக அதைத் தாக்கல் செய்து இருந்தார். அருணாசலாவே லிங்கம் ஆனார் என்பதற்கு ஆதாரமாக அந்தப் பாடல்களுக்கு “அருணாசல லிங்க பரமான்ய வாக்கினி” அதாவது அருணாசலாலே லிங்கம் என்பதற்கு ஆதாரமாக காணப்படும் வரிகள் எனப் பெயர் கொடுத்து இருந்தார். அவை கீழே தரப்பட்டு உள்ளன.











# ஸ்கந்த புராணம், மகேஸ்வர கந்தா, மற்றும் அருணாசல மகாத்மியம் என்பவைகளில் இருந்து

## பாகம் -1

சங்கரர் பிரும்மாவிடம் கூறினார்.

| | | | |
|---|---|---|---|
| | 9 | தேவர்களில் முதல்மையானவரே, கருணைக் கடலே, பூலோகத்தில் ஐந்து பொருட்களிலால் ஆன தெய்வீக சிவ லிங்கங்கள் மனிதர்கள், மற்றும் சித்தர்களினால் நிறுவப்பட்டு உள்ளன. | |
| | 10 | ஆவற்றில் எந்த சிவலிங்கமானது தூய்மையானது, தெய்வீகமானது, ஒப்பற்றது ? மற்றும் தானே தோன்றி ஒளிப்பிழம்பானது என்று எனக்குக் கூறுவீர்களா ? | |

பிரும்மா கூறினார்

| | | | |
|---|---|---|---|
| | 22 | தன்னலமற்ற கருணைக்கடலான சிவபெருமான் அருணாதி என்ற பெயரில் ( அருணாசலத்திற்து இன்னும் ஒரு பெயர் ) ஜோதிஸ்வருபமாக எப்படி ஒரு காலத்தில் தோன்றினார் என்பதைக் கூறுகின்றேன், கேட்டுக் கொள். | |
| | 23 | உலகைப் படைத்த அவரிடம் இருந்தே நானும் நாராயணரும் பிறந்தோம் | |
| | 24 | நாங்களாகவே பிறந்த இருவரும் ஒருமுறை எங்களுக்குள் பயங்கரமாக வாதம் புரிந்து கொண்டோம் | |











| | | | |
|---|---|---|---|
| | 25,31 | அச்சம் உண்டாகும் வகையில் இருவரும் உணர்ச்சிபூர்வமாக சண்டை போட்டுக் கொண்டு இருந்த சமயத்தில் கருணையின் கடலான ஈ.ஸ்வரன் எங்களுக்கு இடையே பெரும் ஜோதி வடிவில் தோன்றினார். | |

பிரும்மா கூறினார்

| | | | |
|---|---|---|---|
| | 50 | அடுத்து அந்த சிவபெருமான் அசையாது இருந்த மலையான அருணாசலாவாக தனது லிங்க உருவை மாற்றிக் கொண்டார். | |
| | 51 | அருணாத்தரி என்ற பெயரில் உலகத்தினரின் கண்களுக்குப் புலப்படும் ஒளிப் பிழம்பான லிங்கம் அது மட்டுமே | |

## பாகம் -2

பிரும்மாவும் விஷ்ணுவும் சிவபெருமானிடம்கூறிக் கொண்டது இது.

| | | | |
|---|---|---|---|
| | 31 | ஜோதி வடிவான தோற்றத்தை மாற்றிக் கொண்டு அருணாசலா என்ற பெயரில் அசையாது உள்ள மலையாக இருந்து கொண்டு உலகை இரட்சிப்பவர் நீங்கள் | |

## பாகம் -4

ஈஸ்வரர் கூறினார்

| | | | |
|---|---|---|---|
| | 37 | நான் இந்த உலகில் அருணாசலா என்ற பெயரில் இந்த உலகத்தினருக்கு மோட்சம் | |











| | | | |
|---|---|---|---|
| | | தருவதற்காக ஜோதி வடிவில் அவதரித்து உள்ளேன். | |
| | 38 | இந்த மலையானது பாபங்களைத் தொலைப்பதினாலும் , இதைப் பார்த்த மட்டிலுமே உலக பந்தங்களில் இருந்து விடுதலைத் தருவதினாலும் அருணாசலா என்ற பெயர் பெற்றது. | |
| | 40 | பண்டை காலத்தில் என்னுள் இருந்து அவதரித்த பிரும்மாவும், விஷ்ணுவும் சண்டைப் போட்டுக் கொண்ட பொழுது அவர்களுக்குள் இருந்த மாயையை துடைத்தெறிய ஜோதி வடிவில் நான் தோன்றினேன். | |
| | 43 | அவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுதான் ஜோதி வடிவில் இருந்த நான் அசையாத மலையாக இங்கு அவதரித்தேன். | |

## பாகம் -5

கௌதமாவிடம் தேவி கூறினாள்

| | | | |
|---|---|---|---|
| | 24 | சிவபெருமான் என்னிடம் கூறினார் “ நான் அருணாசலா என்ற பெயரில் பூமியில் தோன்றி உள்ளேன். உன்னுடைய வாயினால் அருணாசலத்தின் மகிமைக் குறித்து அறிய விரும்புகின்றேன் ” | |











கௌதமா கூறினார்

| | | | |
|---|---|---|---|
| | 42,43 | புண்டைக் காலத்தில் சிவனிடம் இருந்துத் தோன்றிய பிரும்மாவும், விஷ்ணுவும் கர்வம் கொண்டு ஒருவரை ஒருவர் தோற்கடிக்க கடுமையாக சண்டை இட்டுக் கொண்டனர். | |
| | 43,44 | அவர்களுடைய அந்த கர்வத்தை அடக்க யோகிகளினால் வணங்கப்படும் சதாசிவர் ஆரம்பமும், முடிவும் இல்லாத ஒளி வெள்ளமாக ஜோதி உருவில் அவர்களுடைய இடையே நின்றவண்ணம் பத்து திசைகளிலும் ஒளியை காட்டினார். | |
| | 47 | ஆவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு அந்த தேவன் அசையாத மலையாக தன்னை மாற்றிக் கொண்டு அருணாதி என்ற பெயரில் அமர்ந்தார். அமைதியாக அந்த மலை ஒளியைத் தந்து கொண்டு உள்ளது | |

## பாகம் -6

ஈஸ்வரர் கூறினார்

| | | | |
|---|---|---|---|
| . | 21 | அருணாசலா என்ற பெயரில் நான் இந்த பூமியில் அவதரித்து உள்ளேன் | |
| | 22 | அதன் ஜோதி வடிவமே அருணாசலா என்பது. | |
| | 23 | ஒப்பற்ற மகிழ்ச்சியின் வடிவமும் கண்களினால் காண முடியாத அளவு | |











| | | | |
|---|---|---|---|
| | | ஜொலிக்கும் ஒளிப்பிழம்பான நான் இந்த உலகைக் காக்க அமைதியாக அமர்ந்து கொண்டேன். | |

## பாகம் -7

தேவர்கள் கூறினர்

| | | | |
|---|---|---|---|
| | 9 | பகவானே , அருணாதிர்வரா , இந்த உலகத்திற்கு நன்மைகளை செய்பவரே , நெருப்புப் போல தோன்றும் நீங்கள் அமைதியாக இந்த உலகத்திற்கு நன்மை செய்ய ஜோதி வடிவமாக உள்ளீர்கள். | |

கௌதமா கூறினார்

| | | | |
|---|---|---|---|
| | 5 | தேவர்கள் வேண்டுகோளை ஏற்ற் அருணாதிசாவின் கோபம் மெல்ல மெல்ல மறைந்தது. அவர் அமைதியாகி உலகத்தைக் காக்க அருணாசலாவாக மாறினார் | |

## பாகம் -7

| | | | |
|---|---|---|---|
| | 20 | நீங்கள் இந்த உலகத்தில் சோனாத்தரியாக ( அருணாவசலாவின் மற்றொரு பெயர் ) ஆகி நின்றீர்கள் | |
| | 17 | இந்த உலகத்தில் வேறு எங்குமே சிவலிங்கம் மலையாக உருமாறி நின்றதைப் பார்க்கவில்லை. | |











## பாகம் -13

பிரும்மா கூறினார்

| | | | |
|---|---|---|---|
| | 42 | அருணாசலா என்ற மலை சதாசிவர்தான். படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்றின் அதிபரான அவரே அந்த மலையாகும். | |
| | 44 | இந்த ஜோதிஸ்வபமான லிங்கம் தேவர்களால் வணங்கப்படுவது. அதனால்தான் மற்ற அனைத்து இடத்தை விட இந்த பூமி புண்ணியம் செய்த பூமியாக விளங்குகின்றது. | |

## ஸ்கந்த மகா புராணத்தின் இரண்டாம் பகுதியில் இருந்து

## பாகம் -4

நந்தீஸ்வரர் கூறினார்

| | | | |
|---|---|---|---|
| | 12 | இந்த உலகத்திற்கு நன்மைகளை செய்யும் சம்பூ எனப்படுபவர் அருணாசலா என்ற பெயரில் மலையாக மாறி நின்றார். | |
| | 14 | இந்த மலையானது பரமேஸ்வரரதான் என்பதினால் மகரிஷிகளால் அது மேரு, கைலாயம் மற்றும் மந்தாராவை விட மேன்மையானதாகக் கருதப்பட்டது. | |
| | 58 | மேரு, கைலாயம் மற்றும் மந்தாரா என்ற எதுவுமே இதற்கு | |















| | | | |
|---|---|---|---|
| | | இணையானவை அல்ல. அவைகள் சிவபெருமான் வசிக்கும் இடம். கற்களாலும் பாறைகளினாலும் நிறையப்பட்டு உள்ளன. ஆனால் இந்த மலையோ மலைகளுக்கு அதிபதையான மலையாக சிவன் தானே அவதரித்துள்ள இடம் | |

## பாகம் -16

சிவன் கூறினார்

| | | | |
|---|---|---|---|
| | 27 | இந்த உலகத்தின் நன்மைகளுக்காக அருணாதி என்ற பெயரில் அழியாத, அசையாத மலையாக ஜோதி வடிவமாக நான் எழுந்திருப்பேன் | |

## பாகம் -20

கௌதமா கூறினார்

| | | | |
|---|---|---|---|
| | 21 | இந்த அருணாத்தரி என்ற மலை நெருப்புப் பிழம்பு போன்ற ஜோதியின் மறு உருவமே. | |

## சிவ புராணம் மற்றும் விஸ்வேஸ்வர சம்மிதாவில் இருந்து

## பாகம் -9

ஈஸ்வரர் கூறினார்

| | | | |
|---|---|---|---|
| | 21 | நெருப்பு ஒளி போல இந்த மலையாக லிங்கம் எழுந்து விட்டதினால் இது அருணாசலா என அறியப்படும். | |






| | | | |
|---|---|---|---|
| | 41,42 | பிரும்மனாக உருவமற்று தோன்றும் இது லிங்கத்தின் அனைத்து குணங்களையும் பெற்று உள்ளதால் இது நானாகவே நிற்கும் சிவலிங்கம் ஆகும். | |


ஸ்கந்த மகா புராணமும் சிவ புராணமும் பதினெட்டு புராணங்களில் ஒன்றாகும். அவற்றில் காணப்படும் மேற் கூறியவைகள் அனைத்தும் பகவான் அளித்த வாக்குமூலத்திற்கு ஒரு சாட்சியம் போல நீதி மன்றத்திற்கு காட்டியது. ஆனால் துரதிஷ்டவசமாக பிரச்சனை அந்த மலையின் பெருமை பற்றியதல்ல, மாறாக , அதன் அதிபதி யார் என்பதே பிரச்சனையாகி நின்றது. இந்தியாவைப் பொறுத்தவரை சொத்துக்களின் உண்மையான சொந்தக்காரர்களை நீதி மன்றங்கள் நன்கு பாதுகாக்கின்றன. 1940 ஆம் ஆண்டு ஜுன் மாதம் சுமார் ஆறு வருடங்களாக நடைபெற்ற விவாதத்திற்கு பிறகு நீதி மன்றம் தீர்ப்பு தந்தது.

அதன் இடையே இரண்டு பிரதிவாதிகளுக்கு இடையே வழக்கு மன்றத்திற்கு வெளியே ஏற்பட்ட உடன்பாடு தீர்ப்பின் அடிப்படையாக அமைந்தது. வேறு வழி இன்றி தேவஸ்தானம் அரசுதான் அதன் உரிமையாளர் என ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. அதே சமயத்தில் அந்த இடத்தில் இருந்து புற்களை வெட்டுவதின் மூலம் கிடைக்கும் வருவாய் தேவஸ்தானத்திற்கு போய் சேரும் எனவும், அருணாசலத்தில் உள்ள அனைத்து மத சம்மந்தமான சொத்துக்களை பராமரிக்கும் பொறுப்பும் தேவஸ்தானம் வைத்து இருக்கும் எனவும், அந்த மலையில் இருந்து கிடைக்கும் காய்ந்து போன கட்டைகளும் விறகுகளும் தேவஸ்தானத்திற்கு போய் சேரும் எனவும், அந்த இடத்தில் அவர்கள் ஆடு











மாடுகளை அங்கு மேய்வதற்கு உரிமை பெற்றவர்கள் எனவும் அரசினால் ஏற்கப்பட்டன. ஆனால் அந்த இடத்தில் கட்டிடங்கள் கட்டவோ விற்கவோ அரசாங்க அனுமதி பெறவேண்டும் என்பதை தேவஸ்தானம் ஏற்க வேண்டி இருந்தது.

இப்படியாக தீர்ப்பு வந்த பின் பதினைந்து ஆண்டுகள் கழிந்து விட்டன. திருவண்ணாமலை நிறையவே மாறுதல் அடைந்து நன்கு வளர்ந்து உள்ளது. ஒரு லட்சத்திற்கும் மேலாக மக்கள் தொகை அங்கு பெருக அதைத் தவிற மலையை அடுத்து பலரும் குடியேறினர். அவர்களுக்கு தங்குவதற்கு இடம் வேண்டும் என்பதினால் பல மரங்கள் வெட்டப்பட்டன. அந்த மலைப் பகுதியில் இருந்த பழைய மரங்கள் பலவும் அழிந்தாலும் அவற்றை ஈடு கட்ட நடந்த புனரமைக்கும் பணிக்கு சிறிய அளவில்தான் வெற்றி கிடைத்தது.

1980 ஆம் ஆண்டுவரை அந்த மலைப் பகுதியில் புதிய குடியேற்றம் நடைபெறாமல் அரசு பாதுகாத்து வந்திருந்தது. ஆனால் இரு தரப்பினராலும் அந்த மலைப் பகுதியில் ஏற்பட்டு வந்த சுற்றுப்புற சுழலின் பாதிப்பையையோ, ஒவ்ஒரு ஆண்டும் உள்ளுர் மக்களினால் புற்கள் வெட்டப்பட்ட பொழுது தோற்றுவிக்கப்பட்ட காட்டுத் தீயையோ கட்டுப் படுத்த இயலவில்லை. அவை அந்த மலைப் பகுதியின் இயற்கை சுழ்நிலையை பாழாக்கியது மட்டும் இன்றி காட்டு விலங்கினங்களும் அழியத் துவங்கின. மேன்மேலும் பெருகிக் கொண்டு இருக்கும் மக்களின் குடியேற்றம் அந்த பகுதியை இன்னமும் சீரழித்துக் கொண்டு இருக்க எதாவது ஒரு அற்புதமான செயல் ஏற்பட்டால்தான் அதை தடுக்க முடியும்.

